Regd. No. M

விலை அணா 1

முரசொலி

முரசு 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, தை 1. (14-1-48) புதன்கிழமை [ஒலி 1

செல்வம் சிற்றுண்டி உணவு நிலையம்,
பஸ் ஸ்டாண்டு
விஜயபுரம்
திருவாரூர் S. I. Ry.
நண்பர்கட்கு பொங்கல்
நல் வாழ்த்து.

தங்கள் அன்பும் ஆதரவும்
என்றென்றும் அளிக்கக்கோரும்
A. முத்துகிருஷ்ணன்,
உரித்தாளர்.

எழுதவில்லை

(பேனா முனை)

வந்தேமாதரம்! ஜெய் ஹிந்த்! வர்க்கப்புரட்சி ஓங்குக! ஈரோட்டுப்பாதை என்ற தலைப்பில் ''ஜனநாயக''த்தில் விளாசியிருந்தேனே படித்தீர்களா? அடடா அதைமட்டும் இந்த திராவிடர் கழகத்து இளைஞர்கள் படித்திருந்தால் உடனே ஜோஷிப் பாதைக்கு திரும்பிவிடுவார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்த எத்தனையோ பாதைகளைப் போட்டுப் பார்த்தோம். மக்கள்யுத்தம் என்றஒருபாதை, அது 'வார்டயம்' பிசினஸ்! 'காங்கிரஸ் லீக் ஐக்ய முன்னணி என்ற கோஷம் பாக்கிஸ்தான் இந்துஸ்தான் பிரிவினையில் முடிந்தது. 'மெஜாரட்டி கட்சியோடு சேர்ந்து வேலைசெய்தல்' என்ற கொள்கையை அனுஷ்டித்து காங்கிரஸின் பாதார விந்தங்களை அர்ச்சித்து முடிவில் 'துரோகி' என்ற பட்டத்தைப் பெற்றோம். அதை தேசிய 'மகாசபை எங்களுக்களித்த 'திவான் பகதூர்' பட்டம் என எண்ணித் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

கிஸான்கள் கிளர்ச்சி, ஆலைகளில் அதிர்ச்சி, இன்னோன்ன தொழிலாளர் புரட்சிகளில் தலையிட்டு ஆதரவு கொடுத்தோம். உதைத்த காலையே—அதாவது காங்கிரசையே முத்தமிட்டோம். அது இந்த கிளர்ச்சி நேரங்களில் 144, தடையுத்தரவுகளால் எங்களை அணைத்து ஆட்கொண்டது ஆனாலும்எங்கள் கையிலேயிருந்த மூவர்ணக்கொடியை கீழேபோடவில்லை. இரு கொடி எந்திகள் என்றுகூட நாட்டில் எள்ளனம் பிறந்தது. அப்போதும் காதைப் பொத்திக்கொண்டோம். பொன்மலைத் தொழிலாளர் நால்வர்—காங்கிரஸ்ஆட்சியின் சுட்டுவிரல் அசைந்ததுதான் தாமதம் சுட்டுக் கொல்லப்பட்டனர், அந்த வீரர்களின் மனைவிகள் விதவைகளாகி மஞ்சள் கூட அழியவில்லை; அதற்குள் நாங்கள் மூவர்ணக் கொடிக்கு 'சலாம்' போட்டு நின்றோம். எங்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரங்களில் எங்கள் வாய் பூட்டப்பட்ட வேளைகளில் நாங்கள் மறைந்து வாழ்ந்த நாட்களில் பத்திரிகைகளில் எழுதி பட்டாளி வர்க்கத்துக்குப் பணிபல புரிந்தவர்கள் அல்லலுற்ற ஆலைத் தொழிலாளருக்கு ஆறுதல் அளித்தவர்கள்—தொழிலாளர் கூட்டங்களில் கலந்து அவர்கட்கு உணர்ச்சியூட்டியவர்கள்—இன்னும் அவர்களுக்காக உண்மையாக உழைப்பவர்கள் திராவிடர் கழகத்தார் என்பதை என் மனமார மறக்கமுடியாது.

வேண்டுமானால் பேனா முனையால் கிறுக்கலாம். மேடையில் உளரலாம், அதுவும் மனச்சாட்சியை 'மார்க்கெட்'டில் வைத்துவிட்டு!

நன்றி தெரிவிக்க வேண்டிய நாங்கள் அதற்கு மாறாக கழகத்தை நசுக்க முற்பட்டிருக்கிறோம். 'நன்றல்ல தன்றே மறப்பது நன்று' என்ற வள்ளுவர் வாய்மொழியை தேசியத் தோழர்களிடம் அனுஷ்டித்தோம். அந்தக் குறளின் முதலடியான 'நன்றி மறப்பது நன்றன்று' என்பதை கழகத்தாரிடம் காட்டத் தவறினோம். தவறுவதென்ன...... அதுதான் எங்கள் கொள்கையுங்கூட!

'அசகாய சூரத்தனங்கள், ஜெகஜாலப் புரட்டுகள் செய்தும் எங்கள் பாதையில் வெற்றிக்குறி தென்படவில்லை. கம்யூனிசப்

(8-ம் பக்கம் பார்க்க)

பத்தினியே உன்போல்........!

"ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி என்கிறார்களே அது எப்படிப் பொருந்தும்?"

"ஐவர் என்றால் ஐந்து பஞ்ச பூதங்கள், காந்திஜீ கூட அரிஜன் பத்திரிகையில் அப்படித்தான் வியாக்யானம் செய்திருக்கிறார். எல்லாம் தத்துவார்த்தம்"

"பஞ்ச பூதங்களா?....... சரி...... அவள் கர்ணன் மேலுங்காதல் கொண்டாளாமே அந்த ஆறாவது பூதம் எதுவோ?"

"............" பதில் இல்லை.

"பருவமடையாத குந்திதேவி கர்ணன் என்ற பாலகனை கன்னத்தால் பெற்றாள்! அது எப்படி முடியும்?"

"பகவத் அனுக்ரகம், வரப்பிரசாதம்."

"பால்யத்திலே சூரியபகவானைக்கூடி பிள்ளை பெற்றவள் பிறகு பாண்டு மகாராஜாவைமணந்தது பத்தினித் தன்மைக்கு ஏற்றதா?"

"அடபாவி... சூரியனை அவள் கூடினாளா? டேநாக்கு அழுகிவிடுமடா! அநியாயம்பேசாதே! குந்திதேவி குளிகை சாப்பிட்டாள். சூரியன் வந்தார். வரம் தந்தார். உடனே கர்ணன் தோன்றினான். பார்த்தது மாதிரி பொய் பேசாதேடா பாவிப் பயலே!"

"ஓகோ அப்படியா!... சரி! பாண்டுவை மணந்த குந்திதேவி யமதர்மனுக்கு தர்மனையும், வாயுபகவானுக்கு பீமனையும், இந்திரனுக்கு அர்ச்சுனனையும் பெற்றாளாமே... அது?"

"அதிலும் தோஷமில்லை. யமன், வாயு, இந்திரன் மூவரையும் குந்திதேவி கையால் தொடவில்லை. குளிகையை சாப்பிட்டாள். அவர்கள் பிரத்யக்ஷமானார்கள் அவள் கும்பிட்டாள். குழந்தைகள் தோன்றினார்கள். இதெல்லாம் தத்துவார்த்தமடா தருதலை!"

* * *

வயதில் பெரியவரை எதிர்த்துப் பேசுவானேன் என்று கேள்வி கேட்ட வாலிபன் திரும்பி விடுகிறான் அல்லது சாக்கடையில் சவ்வாது மணமா கிளம்பும் என்ற திருப்தியோடு பேச்சை முடித்துவிடுகிறான்.

ஆனால் ஒன்று... தத்துவார்த்த முக்காடு போட்டு தகாறுப் புராணங்களைக் காப்பாற்றப் புறப்படும் பிரசங்கபூஷணங்கள் ஸ்ரீஜத் கோவிந்தராஜ அய்யங்காரால் எழுதப்பட்டு 1937ல் வெளியிடப்பட்ட வில்லிபாரத வசனம் 43ம் பக்கத்தை சற்றுப் புரட்டிப் பார்க்கட்டும்.

குழந்தை வேண்டி குந்தி குளிகை சாப்பிடுகிறாள். இந்திரன் தோன்றுகிறான். தோன்றியவன் குந்தியைத் தொடாமல்... அவள் துவளாமல்... "வரந்தந்தேன்" என்று சொல்லி மறைந்துவிடவில்லை. படியுங்கள், அய்யங்காரே கூறுகிறார் அழகாக! சுவை கூட்டி!

"பீதாம்பரமும் பொன்னாபரணமும் தலையில் முடியும், வில்லும் தோளும், வேலும் கையும், வீரகண்டையும் விளங்கத் தோன்றிய எழில் தன்னைக் கண்டு மனங் களிகூர்ந்து மங்கை குந்தியும் காமக் கனியெனக் கட்டி அணைத்தனள். ஏந்தினன் இந்திரன். தாங்கிய கையுடன் தையலைத் தழுவி அமளியிற் கடத்தி அருங்கலையுடனே அணைந்தனன் பன்முறை. (ஒருமுறையல்ல)

இன்பக்கடலில் இறங்கிய மாது அன்பே உருவாய்த் தன் பெருந்தேவுடன் கூடிக் கூடி குலவிக் குலவி ஆடியாடி அகங்களிகூர அவனே தானாய் தானே அவனாய் ஒருருவாகிப் பெருங் களிப்புடனே பெற்றனள் போகம். கலவியிற் களைத்துமண்ணையும்மறந்து தன்னையும்மறந்தாள்!

மன்னன் பாண்டுவின் மனைவி மாற்றான் மடியிலே இந்த மயக்கம் காணுகிறாள். இதை நமது வைதீகப் பித்தர்களிடம் காட்டினால்............ "குடிகேடா! குருடா! பத்தினியைப் பழிக்காதேடா!" என்று குதிப்பார்கள். வரத்தால் பிறந்த குழந்தைகளப்பா பாண்டவர்கள் என்று பழைய கள்ளையே புதிய கலயத்தில் ஊற்றி காலக்ஷேபம் செய்வார்கள். இந்திரன்—குந்தி இவர்களின் இன்பலோக வர்ணனையை அய்யங்கார் ஒருவரே தீட்டியுள்ளதை நாம்எடுத்து நீட்டினால் "பாராமுகம் உன்னையே" என்று வெறுத்துப் பேசிவிட்டு பாஞ்சாலி, குந்தி சிலைகளுக்குமுன் நின்று "பத்தினியே உன்போல் இத்தரை மீதினில்" என்று பாடஆரம்பித்துவிடுவார்கள்.

என்செய்வது? எதிர்காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

[illegible]

புதையல்.

திராவிடத்தின் மாணவர் எழுச்சி கும்பகோணத்தில் இராவிட மாணவர் கழகமாகக் குமுறி எழுந்தது. அதற்கு ஓராண்டின் முன்பே திருவாரூரில் தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றம் உருப்பெற்றது. குடந்தையில் துவக்கவிழாவன்று திருவாரூரில் ஆண்டுவிழா! மன்றத்திற்கு 21—11—42.ல்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

தந்த வாழ்த்து! நீங்கள் சுவைக்க இதோ!

****

தண் பொழிலில் தமிழ்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண் !
வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்காண் !
மக்களிடை எழுச்சிக்த மநந்தா தங்காண் !

கண்மூடிக், துறிமறந்து, தமிழர் தங்கள்
கலைமறந்த நெஞ்சத்தில் ஒளி யெய்துங்காண் !
புண்வாய்ந்தோர் அல்லர்காண்! திருவாரூரின்
புலி இளைஞர்காண்! தோள்கள் பூரித்தார்காண் !

எழில் மன்றச் சட்டத்தை உயிரைப் போலே
எண்ணி அந்த வண்ணமே நடப்பார் கள்காண்
ஒழித்தார்காண் அயர்வுதனை! அவர்கள் நாளும்
உயர்கவிதைச் சுவைதன்னில் தோய்ந்திட் டார்காண்!

மொழியினிலே தமிழ் மொழியே உயர்ந்ததென்றும்
மூச்செல்லாம் தமிழுக்கே என்றும், நல்ல
வழியறிந்து விட்டார்காண்! முத்தமிழ்க்கு
மடை கோலி விட்டார்காண் உலகில் பாய்ச்ச!

இளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக் கூட்டம்!
கிழித்தெறிய தேடுதுகாண் பகைக் கூட்டத்தை!
வளம் பெரிய தமிழ்நாட்டில் தமிழரல்லார்
வால் நீட்டினால் உதைதான் கிடைத் திடுங்காண்!

“ தளும்புதுபார் பத்தியென்றும், யோகமென்றும்,
சாமிஎன்றும், முழுமிஎன்றும், எழுதிப், பேசி,
புளுகிடுதல்” இனிப்பலிக்க வழியில்லைகாண்!
புதுவாழ்வு மலர்ந்ததுகாண் தமிழ்நாட் டின்காண்!

திராவிடர்
புத்தாண்டு வாழ்த்து!
எங்கள் வாடிக்கைக் காரர்களுக்கு
மனமார்ந்த வணக்கம்.

THIRUVIDAM C.T.V.B
BABY BRAND

நவீன நாகரீக முறையில்
கைதேர்ந்த திராவிடத்
தொழிலாளர்களால்
தயாரிக்கப்பட்ட
உடைகள்!

திருவிடம் புகையிலை
திருவிடம் வாசனைப்
பாக்குத்தூள்
தேவைக்கு என்றும்
தயாராக உள்ளன.

திருவிடம் ஸ்டோர்ஸ்,
பேபி பிராண்டு
ரெடிமேட் கம்பெனி,
திருவாரூர்.

வெளியூரில் விற்பனையாளர்கள்
தேவை.

சிறந்த ஒலி பெருக்கி
திருவாரூர்
சேவியர் ஒலிபெருக்கியே!

— பொங்கலன்று —
திருவாரூர் பிரபாத்தில்
மிஸ் மாலினி

முரசொலி
திருவாரூர்.

பெரியார் ஆண்டு 69. தை 1.
14—1—48 புதன்

திடு திடும் !

"வாளை எடு! வாழ்வா? சாவா? என்பதைப் போரில் புரிந்து கொள்வோம்" என்பதற்குமட்டுமல்ல. "வாழ்விலோர் திருநாள்" பாடி, வளமார் காட்டை வாழ்த்திடவும் முரசு முழங்குவதுண்டு.

அந்நாள் ஆண்டமறத்தமிழன் கனகனையும் விசயனையும் களத்தினில் சந்திப்பான். போர்முரசு கொட்டி புலிப்பாய்ச்சல் நடத்துவான். அந்த ஆரிய மன்னர் சிரம் நொறுங்க கண்ணகி சிலைக்குக் கல்லேற்றி சிங்க நடைபோட்டுவருவான். ரத்தம்படிந்த வெற்றிமுரசின் ஒலியும் 'வாழ்க தமிழன்' என்றகீதமும் இமயத்தில் எழுந்து, விந்தியத்தில் எதிரொலித்து, கன்யா குமரியின் கடலோசையில்கலக்கும், வாடிக்கிடந்த காதலியை வெற்றி முரசம் துள்ளியெழச்செய்ய—புதுத்துடிப்பால்பூரித்த இதயங்காட்டி பொன்னழகி வழிபார்த்து நிற்க 'தென்றலே' என்னைத் தேடித் துவண்டாயோ? என்று வந்த காளை, வாய் திறப்பதற்குள்…….. மணவாளன் மார்பினிலே காயங்கண்டு பனிப்பார்வைவீசி, அவன் மலைத்தோளில் முகத்தை ஒட்டிக்கொள்ள—அந்த மகிழ்ச்சியை ஒருகவிதையாக மாற்ற நினைத்து எல்லைக்குள் அதை அடைக்க முடியாமல் தோல்வியால் தொங்கிய முகத்துடன் ஒரு புலவன் திரும்பிவிட………. இன்னணம் காதலும் வீரமும் கரைபுரண்டோடியது திராவிடத்தில் ஒரு நாள்! பழங்கதைதான்! ஆனால் பயனற்ற இன்றைய பாட்டிக்கதையல்ல! நம் பாட்டனும் பாட்டியும் வாழ்ந்த வரலாறு! பெற்றிருந்த பண்பு!

ஆரியர் உருட்டி விளையாடும் உருட்டுச்சட்டி பொம்மைகளாய் ஆங்கில ஏகாதிபத்யத்தை விடக் கொடிய வடவர் ஏகாதிபத்யத்தின் வால் பிடிப்பவர்களாய்—சீரிளமைத்தமிழ்ஒழித்து, செந்தமிழ் நாடழிக்க இந்திமொழிக்கு 'பாராக்கு'கூறும் சிப்பாய்களாய் இங்குள்ள தோழர் இருக்குங் காலத்திலேயே **பொங்கல் விழா** கண்டு நமக்கு பூரிப்பு தாங்க வில்லையென்றால், காமராஜர்கள் சண்முகங்கள். ஜீவாக்கள்தோன்றியிராத அந்தக் காலத்தில்—மானத்துக்கும் தமிழனுக்கும் நீங்காத தொடர்பு இருந்த அந்தக்காலத்தில்—களத்தில் ஈட்டியை சுவைத்து காதற்பரிசாக இதழ்சுவைத்துக் கிடந்த வீரபரம்பரைவாழ்ந்த அந்தக்காலத்தில்—பொங்கல், இப்படி சோற்றுப் பொங்கலாகவா இருந்திருக்கும்!

'அறுவடை முடிந்ததா அத்தான்? என்று அவள் கேட்க 'எதிரிகளின்படையைநம்மன்னர் அறுத்துக்குவிக்கும்போது பகை மன்னன் மார்பிலிருந்து உருண்டோடிய மாணிக்கத்தைப்போல இதோ பார் நெல் மணிகளை !' என்று கணவன் பதில்கூறியிருப்பான். 'அதோ பார் கொல்லையில் ஆரியனின் வயிறுபோல வைக்கோற்போர்!' என்றுகாட்டியிருப்பான், "அத்தான்! பதரைத் தூற்ற வேண்டாமா?" எனக்கேட்டு முறம் எடுக்கச் செல்பவளைப் பார்த்து கண்ணே! தமிழினத்தில் வந்து கலக்கும் ஆரியக் கொள்கைகளை அகற்றுவதுபோல் இந்தப் பதர்களை யகற்று" எனச் சொல்லியிருப்பான்.

திராவிடனே! அந்நாளை நினைத்துப்பார்! பசி பசி என்று பச்சிளங்குழந்தை அழ…அதுகண்டு பெற்றதாய் அழ…. 'பொங்கலிலும் நாம் பட்டினி தானடா கண்ணே!' என்று தந்தை அழுகின்ற இந்நாளின் கோரநிலையையும் நினைத்துப்பார்!

கிரேக்க ரோமானிய நாடுகள் உன் நாட்டுப் பொருளுக்கு வாய் பிளந்து கிடந்தனவே! நீ ஒரு பிடி சோற்றுக்கும் ஒரு முழத் துணிக்கும் வாய் பிளந்து கிடக்கிறாயே!

இமயமும் இலங்கையும் உன் ஆணை கேட்டுத் தலை கவிழ்ந்தனவே! இன்று நீ அடிமையாக வாழ்கிறாயே! 'இனிமைத் தமிழ்மொழி எமது எமக்கின்பந்தரும் படிவாய்ந்த நல் அமுது' என்று இசைத்தனையே—இன்று இந்திக்குத் தண்டனிடுகிறாயே!

சரித்திரத்தில் திரையிடப்பட்டுள்ள உன் பெருமைகளைக் கேட்டுப்பார்! வேங்கையொத்த பகைவர் எத்தனையோ பேர் உன் வேல் பட்டு வீழ்ந்தனரே—வீரமகனே! உன் கண்களிலே கனல் என்றால் எதிரியின் பாசறை தீக்கு இரை என்றுதானே பொருள்! உன் வீர முழக்கம் வேற்று மன்னன் கோட்டைக்கு வேட்டாயிற்றே! அவையெல்லாம் இன்னாள் எங்கே? கடல் கொள்ளாமல்—களம் புரண்ட ரத்த வெள்ளம் கொள்ளாமல்—பகைவரின்போர்த்திறங் கொள்ளாமல்—வீரத்தை விலை கேட்கும் ஆரியம் கொண்டது என்?

அந்நிலை மீளாதா? புது வாழ்வு மலராதா? மலரும்! மலரவேண்டுமானால் திராவிடா! இந்தப்

பொங்கலில் உன் உள்ளம் பொங்கட்டும்! குன்றெடுக்கும் நெடுந்தோளான் குலத்தினனே! குள்ள நரிக் கூட்டத்தின் குணமறுக்க கூர்வாள் எடு! சாணிப் பிள்ளையாரும் சீனிப் பாயசமும் பொங்கலின் குறிக்கோளல்ல! கோணிக் கிடக்கும் சமுதாயத்தின் குறை தவிர்க்க முரசறைவாய்! போர் முரசறைவாய்!

"திடு திடும்!"

எழுந்தது முரசொலி! எம்மினத்தவரே! முரசொலிக்கு உங்கள் ஆதரவு பொங்கட்டும்!

முரசொலிக்கு!

கவிஞரின் வாழ்த்து!

திரைகடல் மீது
பரிதி எழுந்தே
அரசுவீற் றிருந்தான்
அழகொளி வீசி!
வாழிய பரிதி,
வண்மைத் திருநாள்

இந்நாள் பொங்கல்
இட்டு மகிழும்
தென்னாட்டு மக்களின்
திருவென ஓங்கி
'முரசொலி' நாளும்
முன்னேற்றம் எய்திட

என்மன மார
யான்வாழ்த்து கின்றேன்
என்றும் முரசொலி
இனிது வாழியவே.
வீழிய பகைவர்!
நாளும்
வாழிய திராவிட
மக்கள் நன்றே!

பாரதிதாசன்.

தூக்குமேடை...?

விபரம்
அடுத்த இதழில்.

"தமிழ் நாட்டைத் தாய் நாடாகக் கொண்டு வாழும் சகலரும் தமிழர்தான்"

தினசரி தலையங்கம்—ஜனவரி 2.

இந்திய உப கண்டத்தைத் தாய் நாடு என்று கூறி தாயின் மணிக்கொடி பறக்கவிடும் தேசீயத் தமிழர்கள் (?) யாரோ? அவர்யாரோ?

***

"சுய விளம்பரம் தமிழருக்கு இருந்தால் **பண்பு குறைந்த மாகாண அபிமானம்** இருந்திருந்தால் தமிழரை மற்ற மாகாணத்தார்கள் இன்று பிரமாதமாய் நினைப்பார்கள்"

'தினசரி' தலையங்கம்—ஜன. 2.

மற்ற மாகாணத்தவர் நம்மை மட்டமாக நினைக்கிறார்கள் என்பது மனதில பட்டவரையில் மகிழ்ச்சி!...... ஆனால் மாகாண அபிமானத்தை பண்பு குறைந்தது என்கிறீர...... அட...... இனஉணர்ச்சியற்ற பாந்தமனப்பான்மையே!......

"தமிழைச் சிறுமைப் படுத்த நினைக்கிறவர்களும் தமிழை பிற மொழிபோல பாவிக்கிறவர்களும் தங்களைத் தமிழர் என்று சொல்லிக் கொள்ள முடியாது."

'தினசரி தலையங்கம்'—ஜன. 2.

தினசரியாரே! 'வந்தேமாதரம்' 'ஜெய் ஹிந்த்,' 'போலோ மகாத்மாகி' இவைகளையெல்லாம் தனித்தமிழ் என்று நினைத்துக்கொண்டீர்கள் போலும்!

தேசிகர் தமிழ் பாடியதால் திருவையாற்று மேடைதீட்டாகி விட்டதென்று வேட்டுக்கிளப்பிய வேதியப்பாடகரும் தமிழர்தான் என்று முழங்கும் கிராமணியார் இருக்கும்போதே 'தமிழை சிறுமைப்படுத்த நினைக்கிறவர் தமிழரல்ல' என்கிறீரே இது அவருக்கும் உமக்கும் தகுமா?

***

ஜனவரி 8ந் தேதி சமயபுரம் என்ற ஊரில் தாயை மகன் கொலைசெய்தான்.

10—1—48 பத்திரிகைச் செய்தி

மகாவிஷ்ணு அம்சம் பரசுராமரே தாயைக் கொன்றிருக்கும்போது மனிதனாகிய நமக்கென்ன என்ற தைரியந்தான்!

கண்ணைக் கவரும் வண்ண ஓவியம்!
அறிஞர் அண்ணாவின் முன்னுரை!
புரட்சிக்கவி பாரதிதாசன் சிறப்புரை!
ஆகியவற்றுடன் கூடிய
இராவணன்-நாடகம்.
ஆசிரியர்:- ஏ. கே. வேலன்.
விலை ரூ. 1—12—0. விற்பனைக்கழிவு 20%.
தேவைக்கு:-K. M. சாமி, செயலாளர், செந்தமிழ்ப் பாசறை, தஞ்சை.

கருங்குழி பார்சல்

[தில்லை—வில்லாளன்]

"இது என்ன வாடை?" என்றார் சங்கரம் பிள்ளை—கருங்குழி 'ஸ்டேஷனில்' உள்ள 'பார்ஸல் கிளார்க்.'

"ஆமாங்க, பிண நாற்றமடிக்குது, இந்த 'பார்ஸல்' சந்தேகமாக இருக்குதுங்க" என்று அந்த வயதான 'வழுக்கை மண்டை'—'போர்ட்டர்' வேலாயுதம்—தன் (நாய் மோப்பத்தை) அவிழ்த்துவைத்தான்.

"N. L.' இது என்னடா விலாசம்? வந்து வாரம் ஒன்று ஆகிறது! ஆளுமில்லை, நாளுமாகிறது. டே, வேலா, 'ஸ்டேஷன் மாஸ்டரை'க் கூட்டிவா, உடைத்துப் பார்ப்போம்" என்றார் பிள்ளைவாள் மீண்டும்மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டே!

'ஸ்டேஷன் மாஸ்டர்' தாமோதரம் வந்தார், எல்லா 'கிளார்க்கு'களும் கூடிவிட்டனர்.

'போர்ட்டர்கள்' குசுகுசுவென்று பேசிக்கொண்டனர்.

வேலாயுதம் 'பார்சலை' உடைத்தான். பிணவாடையின் எடை அதிகரித்தது! வைக்கோலைப் பிரித்தெடுத்தான்—கருப்பு சீலை தெரிந்தது! ஐயோ, ஒரு பெண்ணின் பிணம்—உப்பி, ஊதி, வெளுத்திருந்தது! சுற்றியிருந்தவர்கள் விழிகளில் மிரட்சி வழிந்தது.

அந்த மரப் பெட்டிக்குள்ளே நிர்வாணமாக ஒரு 'அழகுப் பேழை' அடக்கஞ்செய்யப்பட்டிருந்தனள். பொன்னை உருக்கியடித்திருக்க வேண்டும். ஆம், அவள் 'தங்கச்சிலை'தான், சந்தேகமில்லை. ஆனால்? அவளின் கன்னங்களிலும்மார்பிலும்காயம் உதடுகளில்புண்—ஆகவே வீக்கம்! அப்புறம்…………… வேலாயுதம் சீலையை இழுத்துப் பிணத்தை மூடிவிட்டான்!

* * *

எழும்பூர் 'ஸ்டேஷனி'ல் ரிஸீவரை' சட்டென்று கீழேவைத்துவிட்டு 'பார்ஸல் கிளார்க்கி'டம் ஓடினார் 'ஸ்டேஷன் மாஸ்டர்' மனோகர். எட்டைப் புரட்டினார். அவர் கண்களின் பசி தீர்ந்துவிட்டதுபோல "அடே, ஏகாம்பரம், ஓடு, விரைவிலே ஓடு, ஓடிப்போய் 'இண்டர்நேஷனல்-பாங்' மானேஜிங் டைரக்டர்' 'மிஸ்டர் ஒயிட் துரை இருக்கிறாரா, விசாரித்துக்கொண்டுவாடா" என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு பொறித்துத் தள்ளினார் வார்த்தைகளை.

விரைக்க விரைக்க ஓடிவந்து நின்றான் ஏகாம்பரம். அவன் 'நாய் சுவாசம்' நடத்திக்கொண்டிருந்தான். 'ஸ்டேஷன் மாஸ்டர்' சிலைபோலிருந்தார். பக்கத்தில் 'பார்ஸல் கிளார்க்' பரமசிவம் பயமே உருவமாக நின்றுகொண்டிருந்தார்.

"என்னடா விசாரித்தாயா?"

"கப்பலேறிவிட்டாராம்"

"ஏண்டா?"

"அக்கரை சீமையிலேதான் அவர் ஊராம். அங்கே போய்ட்டாருங்களாம்"

"திரும்ப எப்போ வருவாராம்?"

"அது அவருக்குத்தான் தெரியும்"

"ஆபீஸில் கேட்டாயா?"

"அவர் வேலையை ராஜினாமா கொடுத்துட்டு கிளம்பிட்டாருங்களாம்"

மனோகர் சற்றுநேரம் யோசித்தார். பரமசிவத்தைப்பார்த்தார். அவர் இவரைப் பார்த்தார். இரண்டுபேரையும் ஏகாம்பரம் வெறிக்க வெறிக்க நோக்கினான்.

"சரி, 'போலிஸு'க்குத்தகவல் கொடுத்துவிடுவோம்."

மனோகர் தன் அறைக்குள் நுழைந்தார். பரமசிவம் அவரைத் தொடர்ந்தார்.

* * *

'இண்டர்நேஷனல் பாங்' வாயிற்படியில் 'போலிஸ்'கார் வந்து நின்றது. திபு திபுவென்று 'போலிஸ்' அதிகாரிகள் வந்து நுழைந்தனர். 'போலிஸ் கமிஷனர்' சண்முகம் எல்லோருக்கும் முன்னால் உள்ளே வந்தார். வழியில்நின்றுகொண்டிருந்தான் 'ஆபீஸ்பியூன்' அங்கப்பன்.

"அடேய். துரை எங்கேடா?"

"லண்டன் போய்ட்டாருங்க"

"ஏன்?"

"வேலை வேணாமின்னுட்டாருங்க"

"ஹெட் கிளார்க் யாருடா?"

"ரங்காராமானுஜ அய்யங்கார்"

"எங்கே அவர்"

"சிந்தாதரிப் பேட்டையிலே வீடுங்க. மூணு நாளாய் பிரமை பிடிச்சவர்மாதிரியிருக்காருங்க — துரை ஊருக்குப் போற முதல் நாள் அவரை டிஸ்மிஸ் செய்திட்டாருங்க."

(5-ம் பக்கம் பார்க்க)

"வந்த 'போலீஸ் புலிகள்' மீண்டும் திரும்பினர். கார் சிந்தாதிரிப்பேட்டையை நோக்கிப் பறந்தது!

* * *

"மிஸ்டர் அய்யங்கார்—இது யார் படம்?"

"ஐயோ போலீஸ்!"

"முதலில் இதைச்சொல்லும்"

"இது என்னுடைய மனைவியின் படம்"

"அவள் எங்கே?"

"? ? ?..........!"

தன் அறையில்உட்கார்ந்திருந்தார் ரங்கராமானுஜம். அவர் முகம் விகாரமாக இருந்தது. தலைமயிர் அலைந்து கிடந்தது. எதிரில் ஒரு பெண்படம் மாட்டியிருந்தது. அதைப் பார்த்து மிரள மிரள விழித்துக்கொண்டிருந்தார், அப்பொழுது 'போலீஸ் கமிஷனர் உள்ளே நுழைந்தார். தன் பையிலிருந்த படத்தை எடுத்துக காட்டிக் கேட்டார். அய்யங்கார் விழித்தார் சுவற்றில் மாட்டியிருந்த படமும், கையிலிருந்த படமும் ஒன்றாக இருந்தது.

"இது யார்?"—மீண்டும் கமிஷனரின் மிரட்டுங் குரல

"என் மனைவியுடையது"—பரிதாபங் கலந்த பதில்.

"அவள் எங்கே?"—அழுத்தமான கேள்வி

மிரண்ட பார்வையும், வரண்ட தொண்டையிலிருந்து விம்மலும், உலர்ந்த உதடுகளில் சிறுநடுக்கமும், கடைசியில் இரண்டு சொட்டு கண்ணீரும் தான் விடை! வேறு என்ன வெளிவரமுடியும்?

"கருங்குழி பார்சலின் கதையைச் சொல்லும்"

"...................."

"காலம் கடத்துவதால்காணும் பலன்?"

"ஸார், சொல்லிவிடுகிறேன், சுருக்கமாக! எனக்குப் பதவியிலே உயர ஆசை, அளவுகடந்த ஆசை-சாதாரண 'கிளார்க்கிலிருந்து தலைமை 'கிளார்க்காக'ப் பார்த்தேன்.

எனக்குகீழிருந்தவர்கள் உயர்ந்தனர். நான்மட்டும் 'பழைய குருடி'யாகவே இருந்தேன். எங்கள் துரையோ வயதில் குறைந்தவன். 'வீனஸ் விளையாடல்களில்' வெகு பிரியம். கூத்தும் குடியும் உண்டு. பலநாள் இதனைக் கண்டேன். பளிச்சென்று ஒரு யோசனை பட்டது. என் கண்ணின் முன் துரையுடன் ஆடும் 'ஆப்பைக்காரக்குட்டியும்' என் வதசலாவும் சேர்நது பட்டனர். வத்சலா விரிக்கும் வலையில் தான் என் நிலையின் உயர்வு என்று எண்ணினேன். அழைத்தேன் மறுத்தாள்: 'நாடகங் காண வாடி' என்றேன். வந்தாள் அவளை துரைக்கு தத்தம் செய்தேன்! அப்பொழுதே அதிகார பூர்வமாக வேலையை உயர்த்தி ஆர்டரையும் தந்தான். வந்துவிட்டேன். அவ்வளவுதான். மூன்றாம் நாள் வேலை போயிற்று என்று, வந்த கடிதம் சொல்லிவிட்டது"

"மானங்கெட்டவனின் மகாத்மியம்தான் உம் கதை"

அய்யங்கார் கையில் அந்த 'அழகிய' வெள்ளிக் காப்புகள் ஏறின. அரசாங்க விருந்தினராக போலீஸார் அவரை அழைத்துச் சென்றனர்.

மீதிக்கதையைப் பேசவேண்டியவர் துரை—லண்டன் சென்றுவிட்டார். இல்லாவிட்டால் வத்ஸலா—அவள் 'கருங்குழி பார்சல்' ஆகிவிட்டாள்!

"அன்று, என்று மில்லாத வழக்கமாக என்னை அழைத்தார் 'எதற்கு?' என்றேன். 'நல்ல நாடகமடி இன்று—'மானங் கெட்டவன்' என்பது நாடகத்தின் நாமம்' என்றார். 'சரி' என்றேன். 'அலங்கார வகைகளில் அணுவும் குறைக்காதே, பார்த்தால் பறித்து தின்னவேண்டும் என்று ஆசைபிறக்கிற அளவு மேனியை மினுக்கிக்கொள்ளடி. 'அப்ஸரஸும், தோற்றுப்போக வேண்டும்' என்று அடுக்கினார். கிண்டல் என்று எண்ணினேன். வீட்டை விட்டு கிளம்பினோம். 'அடடா', என்று துடித்தார். 'ஏன்?' என்றேன். 'இன்று மாலை துரை வரச்சொன்னார்,' என்றார். 'அப்படியானால் நான் வீட்டிற்குப் போகிறேன். நீங்கள் ஆபீஸரைப் பாருங்களேன்' என்றேன். 'புறப்பட்டுத் திரும்புவதா. வழியிலேதானே துரை வீடு. பார்த்துவிட்டு நாடகம் பார்க்க நடந்துவிடலாம்' என்றார் துரை வீட்டு வாசலையடைந்ததும் நான் தயங்கினேன். 'என்னடி!' என்றார். 'நான் வெளியில் இருக்கிறேன். போய் நொடியில் திரும்பிவிடுங்கள்' என்றேன் 'போடி பைத்தியம்! எங்கள் துரை புலியா, சிங்கமா நீயும் வாயேன். அதுவும் அவர் வெள்ளைக்காரர். நம்ம ஆள்கள்மாதிரி வெறிக்கப் பார்க்கிற விகாரபுத்தி கிடையாதடி' என்றார். மனமில்லாமல் சென்றேன். துரை எங்களை வரவேற்றார்.

ஏதோ எழுதினார். நீட்டினார் துரை. அவர் பெற்றுக்கொண்டு வெளியில் செல்ல எழுந்தார். நான் தொடர்ந்தேன். 'இங்கேயே இரு வந்துவிடுகிறேன், என்றார். அப்பொழுதுதான் சந்தேகம் தொடங்கிற்று. பயம் படர்ந்தது. அமர்ந்தேன். மணி ஆகஆக துரையின் முகத்தில் ஒருவகையான உணர்ச்சி படர்ந்தது. "என்னை விரும்புகிறாயா?" என்றுசட்டென்றுவார்த்தைகள் தெறித்தன. நிலைமை இப்பொழுது நன்றாக விளங்கிவிட்டது! யோசித்தேன். என் கணவன்

கருங்குழி பார்சல்

என் கண்முன் ஒரு நரிபோலவே தென்பட்டான். மானங்கெட்ட மாடு மாதிரி புலப்பட்டான்!

“துரையே, உன் விருப்பப்படி நடக்கிறேன். ஆனால்..?”

“என்ன?”

முதலில் அந்த மானங்கெட்டவனை வேலையை விட்டு நீக்கவேண்டும்...”

“அப்புறம்”

“என்னை எப்பொழுதும் உன்னோடு வைத்துக்கொள்ள வேண்டும்!”

“ஆகட்டும்”

பிறகு தொடங்கி விட்டான் இருட்டறைக் கலை’யை! தொட்டான் துவண்டேன். விட்டானா? நான்தான் விலகினேனா? —மூன்று பகல் ஆமாம், பட்டப் பகல்! யார் இதை அட்டி செய்வது? மூன்று இரவுகள், விழித்த விழி மூடாமல் விளையாட்டுகள் விதவிதமாய், மணிக்கு மணி, மாறிமாறி......!

கடைசி இரவு, கோப்பையிலே கொட்டினான் அந்த குங்கும நிற குழம்பை— ‘ஒயின்’ அதன் பேர்! குடி யென்று, மடியிலே இழுத்துப்போட்டு ஊற்றினான். குடித்தேன். எஞ்சிய எச்சிலை அவன் உறிஞ்சினான். ‘பாட்டில்கள்’ பல காலியாயின. ஆட்டம் தொடங்கிவிட்டது! ஐயோ கன்னங்களிலும், உதடுகளிலும் சிறு சிறு ‘எறும்புக்கடிப்பு’... பிறகு திடீரென்று ஒருவலி— உயிர்போவது போல! ஐயோ என்று அலறினேன்; அவ்வளவுதான்”

இதுதான் தொடர்ந்து சொல்லவேண்டிய ‘சொச்சக் கதை’ அப்புறம் அழகு வத்சலா ‘கருங்குழி பார்சலானாள்’— அழுகிய பிணம் பேசியிருந்தால் இதைத்தான் சொல்லும்! மிகுதியை சிந்தித்து முடித்துக்கொள்வார்கள், வாசகர்கள்-ஐயோ ‘கருங்குழி பார்சல்’—மானங்கெட்ட சமுதாயத்தின் ஒரு அணுவிட்ட விஷ மூச்சு!

(முதல் பக்க தொடர்ச்சி)

பாதைக்குப் பாட்டாளிகளை அழைத்துச் செல்வதாக கதையளந்த நாங்களே ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒருகால்வைத்து நடக்கவேண்டியிருக்கிறதே...... நாங்கள் எங்கே வெற்றிப்பாதை போடுவது?......இந்தக் குழப்பமான நிலையில்தான் இனத்தின் பெயரால் பாட்டாளிப் படை அணிவகுக்கப்பட்டு ஆயிரமாயிரம் வீரர்களின் இதயத்தில் புதுத் துடிப்பைஉண்டுபண்ணிய ஈரோட்டுப்பாதை எனக்கு வயிற்றெரிச்சலைஏற்படுத்தியது. நான் விட்டுப்பிரிந்த பாதை, நாசமாகிவிடும என்று கனவுகண்டுகொண்டிருந்த பாதை. அந்தப் பாதையிலே பாவலர், நாவலர், பாட்டாளித் தோழர்! என்ன ஆச்சரியம் “திராவிட நாடு திராவிடருக்கே! பிறவி முதலாளி ஒழிக!” இந்த கோஷம என் காதுகளில்கூட விழுந்தது என்றால் எனக்குப் பொறாமை பிறக்காமலிருக்குமா? நாங்கள் சொல்வதைவிட சற்று அதிகப்படியான—ஆனால் உண்மையான பொதுவுடமைப் பிரச்சாரம்— அதுவும் மக்கள்உள்ளத்தை தொரட்டி போட்டு இழுக்குமளவுக்கு திராவிடர் கழகத்தாரால்செய்யப்பட்டு தென்னாட்டில் ஜோஷியின் கம்யூனிஸ்ட் கட்சி தேவையில்லைஎனகிற அளவுக்கு மக்கள் மனோநிலை மாறிவிட்டால் வேறு எங்களுக்கு வேலை ஏது? இந்தக்கேள்வியை யொட்டிக்கிளம்பியதுதான் என் பொச்சரிப்பில் பூத்த கட்டுரையாம் ஈரோட்டுப் பாதை. என்ன செய்வது? நன்றிமறக்கக்கூடாதுதான். பொறாமையுங் கொடிய விஷந்தான்! ஆனாலும் திராவிடர் கழகத்தைத் தாக்க வேண்டிய நிலையை சிருஷ்டித்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே... இல்லாவிட்டால் ஈ.வெ.ராவின் உண்மையான—ஏற்றதான—தொழிலாளர் கொள்கை எங்கள் ‘மார்க்ஸிஸிய மதரசா’வில்உள்ள மாணவர்களை ஸ்தம்பிக்கச் செய்து, எங்கள் பாதையில் ஸ்தம்பனம் உண்டாக்கிவிடுமே. நாங்கள் தயாரிக்கும் ‘கிளிப்பிள்ளைகள்’ ஈரோட்டுப்பாதைக்குப்பறந்துவிடுமே!

அப்பப்பா!...... பொருந்தாவாதங்கள் நிறைந்து கிடக்கும் என் கட்டுரையில்! ஈ.வெ.ராவின் மேல் இல்லாத குற்றச்சாட்டுகளை குவித்திருக்கிறேன்! சப்பைக்கட்டுகள், செல்லரித்த விஷயங்கள், சொத்தைக்காரணங்கள் இவ்வளவையும் கொண்டுவந்து நிறுத்தி ஈரோட்டுப் பாதையைத் தகர்த்தெறிய சம்மட்டி வேலை நடத்தியிருக்கிறேன்.

இடுக்கோடு இடுக்காக என்னைப்பற்றிய சுய விளம்பரத்தையும் ஒரு மூலையில் திணித்து பெரிய எழுத்தில் அதைப் போடுப்படி கம்பாசிட்டரிடம் சொல்லியும் அவர் போடத் தவறிவிட்டார். என்னைப்பற்றி நான் எழுதும் கட்டுரையில் நானே பெருமைப் படுத்திக்கொள்ள வேண்டிய துணிச்சலை எனக்களித்த கம்யூனிசத்திற்கு என் வந்தனம் என் வியாசத்தின் ஓட்டைஉடைசல்களை அடுத்த கடிதத்தில் விளக்கமாகத் தொடர்ந்துஎழுதுகிறேன்

இப்படிக்கு தோழன்,

ப. ஜீவானந்தம்.

முரசொலிக்கு

ஆண்டு சந்தா ரூ. 4. தான்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி திருவாரூர்.
பதிப்பாளர்:— கருணை. எம். ஜமால்,
கருணாநிதி (மின்னியக்க) அச்சகம், விஜயபுரம்.